2005 மார்ச் 29]
223—

சார்நிலைக் கருவூலம்

***1026அ—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கின்ற கருத்துரு தற்போது அரசிடம் இல்லை.*

முற்பகல் 10–10

திரு. எம். சுப்பையா பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தற்சமயம் சார் கருவூலம் அமைக்க கருத்துரு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசை என்னுடைய தொகுதி மக்கள் எப்படி நம்பியிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணம் — உயிரும், உடம்பும்; நரம்பும், யாழும்; பூவும், மணமும்; தேனும், இனிப்பும்; சிரிப்பும், மகிழ்வும்; திங்களும், குளிரும்; கதிரும், ஒளியும்; மீனும், புனலும்; விண்ணும், விரிவும்; வேப்பும், தோற்றமும்; வேலும், கூறும்; ஆனும், கன்றும்; ஆறும், கரையும்; அம்பும், வில்லும்; பாட்டும், உரையும்; அவளும், நானும்; அமிழ்தும், தமிழும்; அறமும், பயனும்; அலையும், கடலும்;*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சுப்பையா பாண்டியன், அவள் என்பது யார் என்பது தெரியவில்லை.*

திரு. எம். சுப்பையா பாண்டியன்: *அது என்னுடைய துணைவியார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. எம். சுப்பையா பாண்டியன்: *தவமும், அருளும்; தாயும், சேயும்; தாரும், சீரும்; வேரும், மரமும்; அவலும், இடியும்; ஆலும், நிழலும்; அசைவும், நடிப்பும்; அணியும், பணியும்; அவையும், துணிவும்; உழைப்பும், களைப்பும்; ஆட்சியும், உரிமமும்; அளித்தலும், புகழ்தலும்; அம்மாவும், கழகமும்போல் என்னுடைய தொகுதி மக்கள் இந்த அரசை அவ்வளவு இணைத்திருக்கிறார்கள்.*

[2005 மார்ச் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பையா பாண்டியனும், கவிதையும்போல்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு நம்முடைய நிதி அமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு போர்ப் படைத் தளபதியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து, என்னுடைய தொகுதிக்கு இந்த ஆண்டே சார் கருவூலம் அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் பிரச்சினை இருக்கிறது. காரணம், கடையநல்லூரில் ஒரு சார் கருவூலம் அமைக்க வேண்டுமென்றால், அதற்குத் தேவையான வேலைப் பளு இருக்க வேண்டும். அது இல்லை. ஓய்வூதியம் பெறுவோருடைய, பயனாளிகளின் எண்ணிக்கை போதிய அளவு இருக்க வேண்டும். அதுவும் இல்லையென்ற நிலை. கணினிமயமாக்கப்பட வேண்டும் சார்புக் கருவூலங்கள் என்ற ஒரு நடைமுறையும் இருந்து வருகிறது. இவையெல்லாம் அதற்குத் தடையாக இருக்கின்றன. இருப்பினும், ஆங்கு கருவூலத்தை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா என்பதை அரசு ஆய்ந்து பார்க்கும்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆய்வு செய்யும் என்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

224—

புதிய கட்டடம்

***71186—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு மன்னர் கல்லூரியில் இடிந்து விழுந்துள்ள பழம்பெரும் நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS